க.பொ.த (உ.தர) உதவிக் கருத்தரங்கு - 2014
வணிகக் கல்வி - பகுதி I
விடைகளுக்கான வழிகாட்டி

வினா இலக்கம்	விடை	வினா இலக்கம்	விடை
(1)	2	(16)	2
(2)	4	(17)	2
(3)	3	(18)	3
(4)	4	(19)	5
(5)	3	(20)	2
(6)	4	(21)	2
(7)	2	(22)	3
(8)	1	(23)	3
(9)	4	(24)	5
(10)	4	(25)	2
(11)	2	(26)	4
(12)	4	(27)	3
(13)	3	(28)	4
(14)	4	(29)	2
(15)	4	(30)	4

[பக். 2 ஐப் பார்க்க.

க.பொ.த (உ.தர) உதவிக் கருத்தரங்கு - 2014
வணிகக் கல்வி - பத்திரம் I
விடைகளுக்கான வழிகாட்டி

31. (அ) அண்மிய /அக (முறையே)
    (ஆ) தூர நோக்கு

32. (அ) முன்னைய நாள் அமெரிக்க ஜனாதிபதி ஜோன் எ.ப். கென்னடி
    (ஆ) VAT வரி

33. (அ) போலிப் பங்காளர்
    (ஆ) வரையறையற்றது

34. (அ) புத்துருவாக்கம்
    (ஆ) அளவு ரீதியானதும், பண்பு ரீதியானதும்

35. (அ) பொது அங்கீகாரம்
    (ஆ) ரூ. 99999999.99

36. (அ) A - வெளிநாட்டு
    B - பாரியளவான
    C - ஏற்றுமதி
    (ஆ) காரணீகர்

37. (அ) எண்ணக்கரு ரீதியான திறன்
    (ஆ) அதிகாரம்

38. (அ) அரசாங்க வர்த்தமானிப்பத்திரம்
    (ஆ) A - கைத்தொழில் பொருட்களை வினியோகிப்பவர்
    B - உற்பத்தியாளரின் முகவர்
    C - கைத்தொழில் பொருட்களை வினியோகிப்பவர்

39. (அ) காசு வரவு செலவு அட்டவணை
    (ஆ) நிதி உட்கட்டமைப்பு வசதிகள்

40. (அ) 1. பணிகள் 2. கடமைகள் 3. பொறுப்புக்கள் 4. சேவை நிபந்தகைள்
    (ஆ) செயற்திறன் மதிப்பீடு

41. (அ) போக்குவரத்துச் சேவை / தொடர்பாடல்/ காப்புறுதி/ காசும் வங்கியும்/ களஞ்சியப்படுத்தல்
    (ஆ) வியாபாரம்

42. (அ) ‘தனது வணிகத்தின் செயற்பாடு தொடர்பாகவும் அதன் மூலம் சமூகத்திற்கு ஏற்படுகின்ற தாக்கங்கள் தொடர்பாகவும் தனிப்பட்ட வகையில் வணிகத்திற்குள்ள பொறுப்பாகும்’
    (ஆ) மார்ச் 15

43. 1. புத்துருவாக்கம் 2. செயலுருப்படுத்துவதற்கு தேவையான பின்னணி
    3. செயலுருப்படுத்தல் 4. விருத்தி / மேம்பாடு

[பக். 3 ஐப் பார்க்க.

44. 1. 1840 ஆம் ஆண்டு மோசடித் தடுப்புக் கட்டளைச் சட்டம்
    2. 1890 ஆம் ஆண்டு பங்குடமைக் கட்டளைச் சட்டம்
    3. 2007 ஆம் ஆண்டு 7 ஆம் இலக்கக் கம்பனிச் சட்டம்
    4. 1918 ஆம் ஆண்டு 6 ஆம் இலக்க வணிகப் பெயர்ப் பதிவு செய்தல் கட்டளைச் சட்டம்

45. (அ) டியாரா கணக்கு
    (ஆ) S and P Sri Lanka 20 விலைச்சுட்டி

46. (அ) தேசிய போக்குவரத்து ஆணைக்குழு
    (ஆ) தொலைத் தொடர்பு மேற்பார்வை ஆணைக்குழு

47. (அ) CAM (கணினி உதவியுடனான உற்பத்தி)
    (ஆ) 12,000 அலகுகள்

48. (அ) மெய்ச்சந்தை
    (ஆ) தரம், சிறப்புப்பகுதிகள், வடிவமைப்பு

49. (அ) பங்குகளை அல்லது தொகுதிக் கடன்பத்திரங்களைக் கொள்வனவு செய்தல் அல்லது விற்பனை செய்தல் தொடர்பாகக் காசுக் கொடுப்பனவுகளை தீர்க்கப்படும் திகதியைக் குறிக்கும்.
    (ஆ) இலங்கைப் பிணைகள் செலாவணி ஆணைக்குழு

50. (அ) பிரதேச ரீதியான வலையமைப்பு (LAN) (Local Area Network)
    (ஆ) கோவை இடமாற்றுக் கட்டளைச் சட்டகம் (FTP) (File Transfer Protocol)

/பக். 4 ஐப் பார்க்க.

வணிகக் கல்வி - பத்திரம் II

1. (i) (அ) நேர்ச் சேவையொன்றாகும். (1 × 1 = 1)

வைத்தியசாலையில் சேவையொன்றை வழங்கப்பட்டாலும் இங்கு இயந்திர உபகரணங்கள், மருந்துகள், மருந்து உட்செலுத்திகள், கட்டில்கள் போன்ற பொருட்கள் பயன்படுத்தப்படுகின்றன.

(இரு பொருட்களுக்கு 1 × 2 = 2)

(ஆ)

பொருட்கள்	சேவைகள்
தொட்டுணரக் கூடியது	தொட்டுணர முடியாது
உற்பத்தியாளரிடமிருந்து பிரிக்கக் கூடியது	பிரிக்க முடியாது
நுகர்வும் உற்பத்தியும் ஒரே முறையில் இடம்பெறாது	ஒரே முறையில் இடம் பெறும்
பல்லினத் தன்மையற்றது	பல்லினத்தன்மை கொண்டது
களஞ்சியப்படுத்தி வைக்க முடியும்	களஞ்சியப்படுத்தி வைக்க முடியாது

(வேறுபாடுகள் இரண்டிற்கு புள்ளி 01)

(ii) (அ)
1. இலாபம் பெறல் - கிரயத்தை விட கூடிய வருமானம் பெறல்
2. சமூக நலன்கள் - சமூக சேவைகளில் ஈடுபடுதல்
3. போட்டிக்கு முகம் கொடுத்தல்
4. விற்பனைப் புரழ்வினை உயர்த்தல்
5. நன்மதிப்பினை உயர்த்தல்
6. உற்பத்தியை அதிகரித்தல்
7. பங்குகளின் சந்தைப் பெறுமதி அதிகரித்தல் (1 × 4 = 4)

(ஆ) வாடிக்கையாளர் ⟶ தேவை விருப்பம் ⟶ உற்பத்திப் பொருள் ⟶ இலாபம் பெறுவதற்கு

(விரிவடைவதற்கான படிமுறைகள் இரண்டினை விபரிப்பதற்குப் புள்ளிகள் 02)

(iii) (அ) **வியாபாரத்திற்கு**
- அளவை, நிறுவைக் கருவிகள் தோன்றல்
- களஞ்சியப் படுத்துதலின் நவீன முறைகள் தோன்றல்
- உள்நாட்டு வியாபாரம் விரிவடைதல்

(இரு விடயங்களுக்கு 1/2 × 2 = 1)

உற்பத்திக்கு
- வேறுபட்ட வகையில் தொழிற்சாலைகள் உருவாதல்
- சிற்றளவிலான உற்பத்திகள் பாரியளவினதாக மாறுதல்
- கைப்பழக்க முறைமைக்குப் பதிலாக விருத்தியடைந்த உபகரணங்களைப் பயன்படுத்துதல்
- முன்னேற்றகரமான நுட்பமுறைகளைக் பயன்படுத்துதல்

(இரு விடயங்களுக்கு 1/2 × 2 = 1)

(ஆ) **நுகர்வோர்களுகக்**
- விலை குறைவு./ கொடுக்கல் வாங்கல்கள் மிக விரைவாக இடம்பெறுதல்.
- எழுத்தாவணங்களின் அளவு குறைதல்/ 24 மணித்தியாலச் சேவை
- ஏனையவை

(இரு விடயங்களுக்கு 1/2 × 2 = 1)

[பக். 5 ஐப் பார்க்க.

வணிகர்களுக்கு

- செலவு குறைதல்./ 24 மணித்தியாலங்கள் சேவை
- வியாபாரம் அதிகரிக்கும்/ இடவசதிகள் வரையறுக்கப்பட்டதாக இருத்தல்
- ஏனையவை (இரு விடயங்களுக்கு 1/2 × 2 = 1)

(iv) (அ) **சூழல் வாதிகள்**

- சூழலுக்கு ஏற்படும் தாக்கங்களை வெளிப்படுத்துதல்
- பொறுப்புக் கூற வேண்டிய நிருவனங்களுக்கு அறியச் செய்தல்
- மக்களுக்கு விடயங்களை விளக்குதல்
- சூழலைப் பாதுகாப்பதற்கான நடைமுறைகளை எடுத்தல்
- ஏனைய வணிகங்களுக்கு வழிகாட்டல்களை பெற்றுக் கொள்ளக்கூடிய வசதி
- சிறந்த நிர்வாக அமைப்பிற்கு முன்மாதிரியாக இருத்தல்
- திறன் விருத்திக்குத் துணையாக அமைதல்

(இரு விடயங்களுக்கு 1/2 × 2 = 1)

ஊடகவியலாளர்கள்

- பொது மக்களை அறியச் செய்தல்
- வணிகம் தொடர்பான சாதக பாதக விளைவுகளை எடுத்துக்கூறல்
- ஏனைய வணிகங்களுக்கு முன்மாதிரியாகச் செயற்படல்
- வணிகத்தின் நன்மதிப்பை அதிகரிப்பதற்கான காரணமொன்றாக அமைதல்.

(இரு விடயங்களுக்கு 1/2 × 2 = 1)

(ஆ) உற்பத்திச் செயன்முறையின் ஒவ்வொரு பிரிவுகளையும் பணியாளர்களுக்கு வழங்குதல் வேலைப்பகிர்வு எனக்கூறப்படும். ஒவ்வொரு பணியாளர்களிடமும் ஒப்படைக்கப்பட்ட கருமங்களை அவர்கள் தொடர்ந்து மேற்கொள்ளும்போது அது தொடர்பான சிறந்த தேர்ச்சியொன்று கிடைக்கும். அதுவே சிறப்புத் தேர்ச்சி எனப்படும். வேலைப் பகிர்வின் அடிப்படையில் சிறப்புத் தேர்ச்சி தங்கி இருக்கின்றது.

(முழுமையான விடைக்கு புள்ளிகள் 02)

(v) (அ) இயந்திர உபகரணங்களை உற்பத்தி செய்வதே இரண்டாம் நிலையின் வெளியீடாகக் காணப்படும். அவற்றைப் பயன்படுத்தி முதலாம் நிலையின் விவசாயம், கடல்வாழ் மீன் பிடி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதனால் முதலாம் நிலை உற்பத்திகளின் வினைத்திறன் அதிகரிக்கும்.

(புள்ளிகள் 02)

(ஆ) விவசாயத்துறை 11% கைத்தொழிற்துறை 30% சேவைத்துறை 59%

(மூன்று துறைகளும் சரியாகக் காட்டப்பட்டிருப்பின் புள்ளிகள் 02 ஆகும்.)
(இரு பிரிவுகளைச் சரியாகக் குறிப்பிட்டிருப்பின் புள்ளி 01)
(பிரிவு ஒன்று மட்டும் சரியாயின் புள்ளி வழங்கப்படுவதில்லை.)

2. (i) (அ) நாடொன்றின் வளர்ச்சிக்காக உற்பத்தி வளங்களை முழுமையாகவும் உச்ச வினைத்திறனுடன் பயன்படுத்துதல்/ பொருளாதார உள்ளீடுகளின் மூலம் உச்ச வெளியீடுகளைப் பெற்றுக் கொள்ளுதலைக் குறிக்கும். (புள்ளி 01)

(ஆ) பொருளாதாரமொன்றின் அனைத்து உற்பத்தி வளங்களையும் வினைத்திறனாக உற்பத்தி நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்துதல், உழைப்புக்காரணியை பூரண வேலைவாய்ப்பு மட்டத்தில் பேணல். (புள்ளி 01)

/பக். 6 ஐப் பார்க்க.

(இ) நாடொன்றினுள் நீண்ட காலத்திற்கு தொடர்ச்சியாக அதன் உற்பத்தியின் இயளலவினை அதிகரித்துச் செல்லும் போக்கில் பேணுதல். (புள்ளி 01)

(ஈ) நுகர்வோர்கள், வணிகர்கள், ஊழியர்கள் போன்ற பிரிவினர்களுக்குத் தமது பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்குத் தேவையான சுதந்திரமும் அதற்குரிய பின்னணியும் காணப்படல். (புள்ளி 01)

(ii) (அ) கொள்கை ரீதியான வட்டி வீதத்துடன் பயன்படுத்தப்படும் பல்வேறு சந்தை நடவடிக்கைகள், வணிக வங்கிகளின் வைப்புக்களின் அடிப்படையில் நிர்ணயிக்கப்படும் சட்டரீதியான ஒதுக்க வீதம்
$(1/2 \times 2 = 1)$

(ஆ) நுகர்வாளர் உரிமைகள் எட்டில் குறித்த நான்கினை பெயரிடுவதற்கு. $(1/2 \times 4 = 2)$

(இ) 2003 ஆம் ஆண்டு 9 ஆம் இலக்க நுகர்வோர் பாதுகாப்பு கட்டமைப்புச் சட்டம் (புள்ளி 01)

(iii) (அ) **அனுகூலங்கள்**

- கூடிய மூலதனத்தைத் திரட்ட முடியும்.
- இடர்கள் நட்டங்களை பகிரக்கூடிய தன்மை.
- வெற்றிகரமான தீர்மானங்களைப் எடுக்க முடிதல்.
- பல்வேறு திறமைகளைக் கொண்ட நபர்களை இணைத்துக் கொள்ள முடிதல்.
- ஏனையவை

பிரதிகூலங்கள்

- தீர்மானங்கள் எடுக்கும்போது பங்காளர்களுக்கிடையே கருத்து வேறுபாடுகள் ஏற்பட இடமுண்டு.
- இலாபம் பிரிந்து செல்லல்.
- தீர்மானமெடுப்பதில் கால தாமதம் ஏற்படல்.
- பொதுவாக சட்ட ரீதியான அழுத்தங்கள் தலையீடுகள் இருத்தல்.
- ஏனையவை

(அனுகூலங்கள் இரண்டிற்கு 01 புள்ளியும் பிரதிகூலங்கள் இரண்டிற்கு 01 புள்ளியுமாக மொத்தப் புள்ளிகள் 02 ஆகும்.)

(ஆ)
- கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம்
- கூட்டுறவுச் சேவைகள் ஆணைக்குழு
- இலங்கை தேசிய கூட்டுறவுச் சபை
- கூட்டுறவு முகாமைத்துவ நிறுவனம் (விடயங்கள் 4 ற்கு $1/2 \times 4 = 2$)

(iv) (அ) 2007 ஆம் ஆண்டு 07 ஆம் இலக்கக் கம்பனிச் சட்டம் (புள்ளி 01)
கம்பனிப் பதிவாளர் காரியாலயம் (கம்பனிப் பதிவு செய்தல் காரியாலயம்) (புள்ளி 01)

(ஆ) **அனுகூலங்கள்**

- கூடிய மூலதனத்தைத் திரட்ட முடியும்.
- இடர்கள் பிரிந்து செல்லல்.
- வரையறுக்கப்பட்ட பொறுப்புக்கள்
- வரிச்சலுகைகளுக்கான உரிமை கிடைத்தல்.
- சட்ட ரீதியான தனிமனித அந்தஸ்துக் கிடைத்தல்.
- அரசினதும் தனியார் துறையினதும் கூடிய அங்கீகாரம் கிடைக்கப்பெறல்.

பிரதிகூலங்கள்

- சட்ட ரீதியான தாக்கங்கள் அதிகமிருத்தல்.
- பங்குகளை வழங்கல் விற்பனை செய்தலில் வரையறை காணப்படல்.
- பங்காளர்களின் எண்ணிக்கை 50 க்கு வரையறுக்கப்பட்டிருத்தல்.

(அனுகூலங்கள் பிரதிகூலங்கள் இவ்விரண்டிற்கு $1/2 \times 4 = 2$)

[பக். 7 ஐப் பார்க்க.

(v) (அ) 1. சர்வதேச ரீதியான பரம்பல்
2. போக்குவரத்துத்துறையின் விருத்தி (ஆகாயம்)
3. உல்லாசப் பிரயாண நடவடிக்கைகளின் வளர்ச்சி
4. தொழில்நுட்ப வளர்ச்சி
5. கல்வி நடவடிக்கைகளின் முன்னேற்றம்

(விடயங்கள் 4 இற்கு 1/2 வீதம் புள்ளிகள் 02)

(ஆ) அங்கீகார வணிகங்களின் வகைகள்

- பொருள் உற்பத்தி அங்கீகார வணிகம் — உ-ம் :- IOC , Ceypetco
- உற்பத்தி அங்கீகார வணிகம் — உ-ம் :- Cocacola , Pepsicola
- வியாபார முறைகளுக்கான அங்கீகார வணிகம் — உ-ம் :- KFC , Macdonald

(உதாரணங்களோடு 02 விடையங்களுக்கு புள்ளி 02)

3. (i) (I) முயற்சியாண்மையின் காரணமாக புத்துருவாக்கங்கள் உருவாக்கப்படுவதனால் தேசிய உற்பத்தியானது அதிகரிக்கும்.
(II) புதிய வேலைவாய்ப்புக்கள் தோன்றுவதனால் பொருளாதார விருத்திக்குப் பங்களிப்புச் செய்ய முடிதல்.
(III) சந்தை நடவடிக்கைகள் விரிவடைதல், போட்டித்தன்மை கொண்ட சந்தைகள் உருவாதல் என்பவைகள் பொருளாதார வளர்ச்சிக்குக் காரணமாக அமைகின்றது.
(IV) பிரதேச வளங்களைப் பயன்படுத்துவதனால் அவற்றிற்கான கேள்வியில் அதிகரிப்பு ஏற்படல்.
(V) புதிய வணிகங்களின் தோற்றமானது பொருளாதார விருத்திக்குத் துணையாக அமைதல்.
(VI) வருமானப் பகிர்வில் முரண்பாடுகள் குறைவடையும்.
ஏனைய ஏற்றுக் கொள்ளக்கூடிய விடயங்கள்

(விடயங்கள் 4ற்கு 1 × 4 = 4)

(ii)
★ சிறிய சந்தையாக இருத்தல்.
★ குறைந்தளவிலான மூலதனத்தை இட்டிருத்தல்.
★ பணியாளர்களின் எண்ணிக்கை குறைவாக இருத்தல்.
★ குடும்ப அங்கத்தவர்களின் உழைப்புக் குறைவாகப் பயன்படுத்தப்படல்.
★ தன்னிடம் காணப்படும் தகவல்களினடிப்படையிலேயே தீர்மானமெடுத்தல்.
★ சுயாதீனமான, சுதந்திரமான முகாமை.

(விடயங்கள் 4ற்கு 1 × 4 = 4)

(iii) கடன் ஆலோசனை சார்ந்த சேவைகள்
★ தற்போது காணப்படும் பல்வேறு கடன் பொறிமுறைகள் தொடர்பான அறிவைப் பெற்றுக்கொள்ளச் செய்தல்.
★ பல்வேறு நிதியீட்டல் வழிமுறைகளிலிருந்து கடன் வசதிகளைப் பெற்றுக் கொள்ளக் கூடிய முறைகள் தொடர்பான ஆலோசனை வழங்கல்.
★ சிற்றளவு வணிகத்தை அல்லது சுய தொழில் வணிகத்தை சிறந்த முறையில் முகாமை செய்யக் கூடியவாறான ஆலோசனைகளை வழங்கல்.
★ சிறந்த முறையில் வணிகத்தை நடத்திச் செல்வதற்கு அல்லது தனிப்பட்ட நிதி நிலைமையினை சிறப்பாகப் பேணிக் கொள்வதற்குத் தேவையான வருமானங்கள் செலவுகளில் முகாமை.
★ சிரமங்களுக்குட்பட்டுள்ள கடன் கொள்வனவாளர்களுக்கு மீளெழுச்சி பெறுவதற்காக உதவி செய்தல்.

(விடயங்கள் 4ற்கு 1 × 4 = 4)

[பக். 8 ஐப் பார்க்க.

(iv) (அ) குத்தகை முறையின் அனுகூலங்கள்:-

★ உயர் பெறுமானம் கொண்ட சொத்துக்களை அதன் மொத்தப் பெறுமானத்தையும் செலுத்தாது பயன்படுத்துவதற்கான வசதி கிடைத்தல்.

★ குத்தகைக்காகவேண்டி செலுத்தப்படும் வாடகையானது வருமான வரியிலிருந்து விளக்களிக்கப்படும்.

★ பாரியளவிலான பணத்தொகையினை முதலீடு செய்யாது கூடிய வருமானத்தை ஈட்டக்கூடிய இயலுமை.

★ வணிகத்தின் ஐந்தொகையில் பொறுப்பொன்றாக வெளிப்படுத்தப்படாமை.

(விடயங்கள் 4ற்கு 1/2 × 4 = 2)

(ஆ) குத்தகை ஒப்பந்த வகைகள்:-

★ நிதிக்குத்தகை ★ செயற்பாட்டுக் குத்தகை

(விடயங்கள் 02ற்கு புள்ளிகள் 02)

(v) (அ) 1. மக்கள் கடனட்டை (Credit Card) தொடர்பான போதிய அறிவின்மை.

2. நிலையான வருமாமொன்றற்றிருப்பதனால் நிதி நிறுவனங்கள் கடனட்டை (Credit Card) வழங்குவதில் தயக்கம் காட்டல்.

3. வணிகர்களுகம் அதனை ஏற்பதில் தயக்கம் காட்டுவர்.

(இரு விடயங்கள் புள்ளிகள் 02)

(ஆ) அனுகூலங்கள்

வாடிக்கையாளர்களுக்கு	வணிகர்களுக்கு
(i) வசதியானது	(i) கடன் விற்பனைக்கான பணம் கிடைப்பதென்பது நிச்சயமானதாக இருத்தல்
(ii) குறிப்பிட்ட காலவரையறை வரை வட்டியின்றி கடன் பெறலாம்	(ii) புறழ்வு அதிகரிப்பதன் காரணமாக இலாபம் உயர்வடையும்.
(iii) வெளிநாட்டுக் கொடுக்கல் வாங்கல்களுக்கும் பயன்படுத்த முடியும்	(iii) கொடுக்கல் வாங்கல் செய்வது இலகுவானது
(iv) தன்னியக்க இலத்திரனியல் இயந்திரத்தின் மூலம் (ATM) பணத்தைப் பெற்றுக்கொள்ள முடியும். (அனுமதிக்கப்பட்ட கடன் வரையரையினுள்)	(iv) இலவச விளம்பரம்
(v) பணத்தைக் கொண்டு செல்வதற்கான இடர் காணப்படாமை.	
(vi) கழிவுகள்/மேலதிகப் (BONUS) புள்ளிகள் கிடைத்தல்	

(அனுகூலங்கள் 2ற்கு 1/2 வீதம் புள்ளி 01)

பிரதிகூலங்கள்

வாடிக்கையாளர்களுக்கு	**வணிகர்களுக்கு**
(i) கிரயம்	(i) வங்கிக்குத் தரகுக் கட்டணம் செலுத்த வேண்டி ஏற்படுதல்.
(ii) செலுத்துவதற்குக் காலதாமதம் ஏற்படுவதன் அடிப்படையில் தாமதக் கட்டணமும், வட்டியும் அறவிடப்படல்.	(ii) விஷேட இயந்திரமொன்றை நிருவவேண்டி ஏற்படும்.
(iii) எல்லா வணிக நிலையங்களும் இம்முறையினை பயன்படுத்தாதிருத்தல்.	(iii) பயிற்சி பெற்ற ஊழியர்களை ஈடுபடுத்த வேண்டி ஏற்படும்.
(iv) மோசடிகள் இடம்பெற வாய்ப்பு காணப்படல்	
(v) தேவையற்ற நுகர்வுகளுக்குத் தூண்டப்படல்	

(பிரதிகூலங்கள் 2ற்கு 1/2 வீதம் 01 புள்ளி)

[பக். 9 ஐப் பார்க்க.

4. (i) 1. மோட்டார் வாகனத்தின் சேதத்திற்கான இழப்பீடு - மோட்டார் வாகனக் காப்புறுதி
2. பணியாளர்களுக்கு ஏற்படும் சேதத்திற்கான இழப்பீடு - ஊழியர் நட்டக் காப்புறுதி
3. நிறுவனத்திற்கு ஏற்படும் சேதத்திற்கான இழப்பீடு - தீ/ ஆதன பாதுகாப்புக் காப்புறுதி
4. கள்வர்களின் அச்சம் - களவபாயக் காப்புறுதி
5. உற்பத்திப் பொருள் - பொறுப்புக் காப்புறுதி
6. இயற்கை விபத்துக்கள் - இயற்கை விபத்துக் காப்புறுதி

(இடர்களும் அதற்கான இழப்பீட்டினைப் பெற்றுக்கொள்ளக் கூடிய காப்புறுதிகள் சார்பாக 1 × 4 = 4)

(ii) (அ) இழப்பீட்டினைப் பெற்றுக்கொள்ள முடியும். (புள்ளி 1/2)
இங்கு பிரயாணப்பாதை மாற்றப்பட்டாலும் கப்பலின் எண்ணெய் வெளியேறுதல் போன்ற நியாயமான காரணத்தினடிப்படையில் இடம்பெற்ற நிகழ்வொன்றென்பதை உறுதிப்படுத்தப்படும்போது இழப்பீட்டை பெற்றுக்கொள்ள முடியும்.

(புள்ளி 1 1/2)

(ஆ) 1. சரியானதும் போதுமான அளவிலான தகவல்களினடிப்படையில் தீர்மானமெடுத்தல் இடம்பெற முடியும்.
2. வணிகச் செயற்பாட்டிற்குத் தேவையான ஆலோசனைகளை வழங்குவதற்கு
3. சமமான மட்டத்திலுள்ள துறைகளுக்கிடையில் தகவல்களை பரிமாற்றம் செய்து கொள்ள முடியுமாக இருத்தல்.
4. வெளியகப் பிரிவினர்களுடன் தகவல்களைப் பரிமாற்றம் செய்து கொள்ள முடியுமாக இருத்தல்
5. வணிகத் தீர்மானங்களின்போது பணியாளர் குழுவினர்களை அறியச் செய்வதற்கு
6. பல்வேறு அனுகூலங்கள் தொடர்பில் தேவையான தகவல்களை வழங்குதல்.

(4 விடையங்களுக்கு 1/2 புள்ளி வீதம் 1/2 x 4 = 02)

(iii) 1. ஏற்றுமதியாளரொருவர் எனும் வகையில் பதிவுசெய்து கொள்ளல்.
2. வெளிநாட்டுக் கொள்வனவாளர்களை இனம் காணுதல்.
3. ஏற்றுமதி அனுமதிப் பத்திரத்தைப் பெற்றுக்கொள்ளல் (தேவைப்படின்)
4. இறக்குமதியாளர்களிடமிருந்து கிடைக்கப்பெற்ற விலை விசாரணைகளுக்குத் துலங்களாக விலைக்கூற்று அனுப்புதல்
5. இன்டென்ட்டை / கட்டளை அனுப்புதல்
6. பொருட்களை கப்பலேற்றுவதற்காக கப்பலில் இட ஒதுக்கீடு செய்து கொள்ளலும், அதற்குரிய ஆவணங்களைத் தயாரித்துக் கொள்ளலும்.
7. ஏற்றுமதிப் பொருட்களைக் காப்புறுதி செய்தல்.
8. பொருட்களைக் கப்பலேற்றலும், வார்நாமத்தைப் பெற்றுக் கொள்ளலும்.
9. பணத்தைப் பெற்றுக் கொள்வதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

(குறிப்பிட்டபடிமுறைகள் 6 சரியாக இருப்பின் புள்ளிகள் 04)
(படிமுறைகள் 4 - 5 காணப்படின் புள்ளிகள் 03)
(படிமுறைகள் 3 குறிப்பிடப்பட்டிருப்பின் புள்ளி 01)

(iv) 1. நேரம் சேமிக்கப்படும்.
2. வேகம் கூடியதாக இருப்பதனால் எரிபொருட் செலவு குறைவடையும்.
3. பாதுகாப்புடையதாக இருத்தல்.
4. பசுமையான பொருட்களை ஏற்றிச் செல்வதற்கும், நுகர்வதற்குமான சந்தர்ப்பம் கிடைத்தல்.
5. அழிவுறுதல், வீண்விரயமாதல் என்பன குறைவாகவே இடம் பெறும்.
6. துரிதமாகப் பொருட்களை விநியோகிக்க முடியும்.
7. புதிய வேலைவாய்ப்புக்களும், புதிய வருமான வழிமுறைகளும் உருவாதல்.
8. போக்குவரத்து சாதனங்களின் பாவனைக்காலம் அதிகரித்தல்.

(இது திறந்த வினாவாகும். மேற்காட்டிய விடயங்களுக்குபட்ட விடைக்கு புள்ளிகள் 04)

[பக். 10 ஐப் பார்க்க.

(v) (அ) இயற்கைத் தடைகள்:-

- ★ மொழி ரீதியான வேறுபாடுகள் (புள்ளி 01)
- ★ கலாசார ரீதியான மாற்றங்கள்

இயற்கையல்லாத தடைகள் :-

- ★ சுங்கக் கட்டணம்
- ★ ஏற்றுமதி அளவு
- ★ ஏற்றுமதித்தடை
- ★ செலாவணிக் கட்டுப்பாடு

(புள்ளி 01)

(ஆ) 1. உலக வர்த்தக அமைப்பு (WTO) 2. உலக வங்கி (IBRD)
3. சர்வதேச நாணய நிதியம் (IMF) 4. G 7 குழு
5. G 8 குழு (1/2 வீதம் புள்ளிகள் 02)

5. (i) (அ) ★ தனி நபர்களின் கருமங்கள்

- பிரதானியாகக் கருமமாற்றுதல்.
- தலைவராக நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- தகவல் தொடர்பாடல் மூலம் புறத் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ளல்.

★ தகவற் பணிகள்

- மேற்பார்வை
- தகவல் பரிமாற்றம்
- ஊடகவியலாளராகச் செயற்படல்

★ தீர்மானப் பணிகள்

- முயற்சியாண்மைப் பணிகள்
- பிரச்சினைகளைத் தீர்த்தல்
- வளங்களைப் பகிர்வு செய்யும் பணிகள்
- பேரம் பேசலும், ஒப்பந்தங்களை ஏற்படுத்தலும் (புள்ளிகள் 02)

(ஆ) ★ பொதுவான திறன்கள்

- எண்ணக்கருத்துத் திறன்/ உளம் சார்திறன்
- ஆள்சார் திறன்/ மானிடத் திறன்
- தொழில் நுட்பத் திறன் (1/2 வீதம் 2 விடயங்களுக்கு புள்ளி 01)

★ விஷேட திறன்கள்

- நேர முகாமைத்துவத்திறன்
- தொடர்பாடல் திறன்
- பூகோளமயமாக்கல் முகாமைத்துவத்திறன்
- தீர்மானமெடுக்கும் திறன் (1/2 வீதம் 2 விடயங்களுக்கு புள்ளி 01)

(ii) (அ) பாடசாலையொன்றில் தீர்மானமெடுக்கும்போது உதவி அதிபர்கள், பகுதிக்குப் பொறுப்பான ஆசிரியர்கள் ஆசிரியர் குழு அங்கத்தவர்கள், உயர்தர வகுப்பு மாணவர்கள், பெற்றார்கள், பழைய மாணவர்கள் ஆகியோர்களின் கருத்துக்களை கவனத்திற் கொண்டு அவர்களின் ஒத்துழைப்பைப் பெற்றக்கொள்வது ஜனநாய ரீதியான பாணியிலும் அதேபோன்று சிறந்த ஒழுக்கத்தினைப் பேணிச் செல்வதற்கு சர்வாதிகாரத் தலைமைத்துவப் பாணியும் முக்கியமானதாகும். எனவே இவ்விரு பாணிகளும் கலந்திருப்பது முக்கியமானதாகும்.

(மேற்காட்டிய கருத்தை உள்ளடக்கிய விடைக்கு புள்ளிகள் 02)

/பக். 11 ஐப் பார்க்க.

(ஆ) **திட்டமிடல்**

- ★ இலக்கு நோக்கத்தைத் தீர்மானித்தல்
- ★ உபாய வழிமுறைகளைத் தீர்மானித்தல்
- ★ உபாய வழிமுறைகளை எழுத்து வடிவில் சமர்ப்பித்தல்

ஒழுங்கமைத்தல்

- ★ கருமங்களை இனம் காணல்
- ★ திணைக்களப்படுத்தல்
- ★ வேலைப்பகிர்வு
- ★ அதிகாரங்களையும், பொறுப்புக்களையும் வழங்கல்

செயற்படுத்தல்

★ தலைமைத்துவம் ★ ஊக்குவித்தல் ★ தொடர்பாடல்

கட்டுப்பாடு

- ★ செயற்பாட்டு அடைவு நியமங்களை உருவாக்கல்
- ★ செயற்பாடுகளை மதிப்பிடல்
- ★ ஒப்பிடல்
- ★ தவறுகளைத் நிருத்துவதற்கான நடவடிக்கைகளை எடுத்தல்.
- ★ மாறிகளை இனம்காணல்

(கருமங்கள், துணைக்கருமங்கள் 02 ற்கு 1/2 புள்ளி வீதம் புள்ளிகள் 02)

(iii) (அ)
- ★ நோக்கத்திற்கும், இலக்குகளுக்கும் ஏற்ற அடிப்படைகளைக் கொண்டிருத்தல்.
- ★ செயலுருப்படுத்தக் கூடியதாக இருத்தல்.
- ★ நெகிழ்வுத்தன்மை கொண்டதாக இருத்தல்.
- ★ அனைவரும் விளங்கிக் கொள்ளக்கூடியதாக இருத்தல்.
- ★ குறித்த காலமொன்றிருத்தல்.
- ★ அனைத்து மட்டங்களுக்கும் முகாமையாளர்கள் பங்களிப்பினை வழங்குதல்.
- ★ ஏனைய முகாமைத்துவப் பணிகளுடன் தொடர்புபட்டிருத்தல்.

(1/2 புள்ளிகள் வீதம் 04 விடயங்களுக்கு $1/2 \times 4 = 02$)

(ஆ)

தொழில் முறை அடிப்படை	-	கருமங்களின் அடிப்படையில் வகைப்படுத்தல்
உற்பத்தி அடிப்படை	-	உற்பத்தி செய்யப்படும் உற்பத்திப் பொருட்களின் வகைகளுக்கமைய வகைப்படுத்தல்.
வாடிக்கையாளர் அடிப்படை	-	வாடிக்கையாளர்களின் தன்மைக்கமைய வகைப்படுத்தல்.
பூகோள ரீதியான அடிப்படை	-	வணிகம் பரவியுள்ள பிரதேசத்திற்கமைய வகைப்படுத்தல்
கலவை அடிப்படை		
ஆண் பெண் அடிப்படை		

(1/2 புள்ளி வீதம் 4 விடயங்களுக்கு புள்ளிகள் 02)

(iv) (அ) தொகுதி உற்பத்தியின் பண்புகள்

- ★ அலகுகளின் தொகுதியொன்று கட்டளையின் அடிப்படையில் இடம் பெறுதல்.
- ★ பொதுவாக அலகிற்கான கிரயம் உயர்வாக இருத்தல்.
- ★ ஒரு தடவையில் ஒத்த தன்மை கொண்ட அலகுத்தொகுதிகளை உற்பத்தி செய்தல்.
- ★ சந்தையின் இடர் குறைவாக இருத்தல்.
- ★ குறைவான மூலதனம்.

(1/2 புள்ளி வீதம் 02 விடயங்களுக்கு 01 புள்ளி)

[பக். 12 ஐப் பார்க்க.

பாய்ச்சல் உற்பத்திப் பொருளின் பண்புகள்

- ★ அலகுக்கான கிரயம் குறைவாக இருக்கும்.
- ★ கட்டளையினடிப்படையில் உற்பத்தி இடம்பெறாது.
- ★ சந்தையின் இடர் அதிகமாக இருக்கும்.
- ★ பாரியளவிலான மூலதனம். (1/2 புள்ளி வீதம் 02 விடயங்களுக்கு 01 புள்ளி)

(ஆ) கணினி உதவி வடிவமைப்பு (CAD)
கணினி உதவி உற்பத்தி (CAM)
கணினியுடன் ஒருங்கிணைக்கப்பட்ட உற்பத்தி (CIM)
ரோபோ இயந்திர உற்பத்தி (Robotics)
நெகிழ்வு உற்பத்தி முறை (FMS)
(1/2 புள்ளி வீதம் 04 விடயங்களுக்கு 02 புள்ளிகள்)

(v) (அ) பண்புக் கட்டுப்பாடு
சரக்கிருப்பு கட்டுப்பாடு
கிரயக் கட்டுப்பாடு
இயந்திரக் கட்டுப்பாடு
செயற்பாட்டுக் கட்டுப்பாடு (1/2 புள்ளி வீதம் 4 விடயங்களுக்கு 02 புள்ளிகள்)

(ஆ) தரக் கட்டுப்பாடு
தரப் பாதுகாப்பு
முழுமையான தர முகாமைத்துவம்
தரக் கட்டுப்பாட்டு வட்டம்
பூச்சிய வழு
தர நியமங்கள்
புள்ளிவிபர செயல்முறைக் கட்டுப்பாடு
(1/2 புள்ளி வீதம் 4 விடயங்களுக்கு 02 புள்ளிகள்)

6. (i) (அ) உற்பத்தி நிறுவனமொன்றின் உள்ளீட்டிற்கும் வெளியீட்டிற்கும் இடையில் காணப்படும் விகித ரீதியான தொடர்பு விளைத்திறனாகும். உற்பத்தியின் வினைத்திறனை அளவிடுவதற்கான அளவீடாக இவ்விளைத்திறன் பயன்படுததப்படும். (புள்ளிகள் 02)

(ஆ) $\text{விளை திறன்} = \dfrac{\text{வெளியீடு}}{\text{உள்ளீடு}}$

(புள்ளி 01)

கிடைக்கின்ற விடையானது 01 ஐ விட அதிகமாக இருப்பின் விளைத்திறன் அதிகரிப்பினையும் காட்ட 01 ஐ விடக் குறைவாயின் விளைதிறனில் வீழ்ச்சியினையும் காட்டும். (புள்ளி 01)

(ii) 1. சரக்குப் பேணல் கிரயம் உயர்வடையும்.
2. இருப்பு அழிவுறுவதன் காரணமாக ஏற்படும் கிரயம்.
3. இருப்புக்களில் பண முடக்கம் ஏற்படும்.
4. காலம் கடந்தவையாதல், களவாடல் காரணமாக ஏற்படும் கிரயம்.
5. காப்புறுதிக் கிரயம் அதிகரித்தல்.
6. களஞ்சியப்படுத்துவதற்குக் கூடுதலான இடவசதி தேவைப்படல்.
(1 புள்ளி வீதம் 4 விடயங்களுக்கு புள்ளிகள் 04)

(iii) (அ) சந்தைப்படுத்தல் கலவையானது உற்பத்திப்பொருள், விலை, இடம் (வினியோகம்) மேம்பாடு போன்ற மாறிகள் நான்கினை உள்ளடக்கியுள்ளது. இந்நான்கு (4 Ps) மாறிகளினூடாக எடுக்கப்படும் தீர்மானங்களால் இலக்குச் சந்தையின் வணிகர்களுக்கும் இறுதி நுகர்வாளர்களுக்கும் தாக்கங்களை ஏற்படுத்தும்.

(புள்ளிகள் 02)

/பக். 13 ஐப் பார்க்க.

(ஆ) 1. விளம்பரம்
2. விற்பனை மேம்படுத்தல்கள்
3. மக்கள் தொடர்பும், பிரசித்தமும்
4. நிகழ்வுகளும், அனுபவங்களும்
5. தனிப்பட்ட விற்பனைகள்
6. நேரடி விற்பனைகள்
7. உள்ளகச் செயற்பாடுகள்

(1/2 வீதம் 4 விடயங்களுக்கு 02 புள்ளிகள்)

(iv)

- நிதி முகாமைத்துவ தீர்மானம்
  - முதலீட்டுத் தீர்மானம்
    - தொழிற்பாடு மூலதனத் தீர்மானம் (குறுங்கால முதலீட்டுத் தீர்மானம்)
      - நடைமுறைச் சொத்துக்கள்
    - மூலதன முதலீட்டுத் தீர்மானம் (நீண்டகால முதலீட்டுத் தீர்மானம்)
      - நடைமுறை அல்லாச் சொத்துக்கள்
  - நிதித் தீர்மானம்
    - நீண்டகாலம்
      - மூலதனம்
    - குறுங்காலம்
      - நடைமுறை பொறுப்புத் தொடர்பான தீர்மானம்

(நிதித் தீர்மானங்களை விளக்குவதற்கு 4 புள்ளிகள்)

(v) (அ) நேர்முறையிலான நிதியீட்டல் வகைகள்
1. பங்குகள்
2. தொகுதிக் கடன்கள்
3. சொத்துக்களை விற்றல்
4. வணிகப் பத்திரங்கள் (1/2 வீதம் 2 விடயங்களுக்கு 1 புள்ளி)

நேரில் நிதியீட்டல் வழிமுறைகள்
1. வங்கிக் கடன்
2. வங்கி மேலதிகப் பற்று
3. குத்தகை (1/2 வீதம் 2 விடயங்களுக்கு 02 புள்ளி)

(ஆ)
- ⋆ வணிகத்தின் இலாபத்தன்மை
- ⋆ செயற்பாட்டுத் தன்மை
- ⋆ நிதி இணைப்பு நிலைமை
- ⋆ திரவத் தன்மை (1/2 வீதம் 02ற்கு 01 புள்ளி)

7. (i) (அ)
- ⋆ மேலதிக சொத்துக்களை விற்பனை செய்தல்.
- ⋆ பெறுமானத் தேய்வொதுக்கம்
- ⋆ நிறுத்தி வைத்த இலாபம்
- ⋆ தொழிற்படு மூலதனத்தை முறையாகப் பேணல்.

(4 விடயங்களுக்கு 1/2 வீதம் 02 புள்ளிகள்)

(ஆ) உரிமையாளரின் மூலதனப் பண்புகளிலும், கடன் மூலதனப் பண்புகளிலும் காணக்கூடியதாக இருப்பதே நிதியீட்டல் வழிமுறைகளாகும். (புள்ளிகள் 02)

(ii) (அ)
1. முதலீட்டாளர்களுக்குப் பல்வேறு அனுகூலங்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.
2. கம்பனிகளுக்கு மூலதனத்தினைத் திரட்டிக்கொள்ள முடியும்.
3. அரசின் திறைசேரி முறிகளை விற்பனை செய்ய முடியும்.
4. கம்பனிகளின் நன்மதிப்பும் நிறுவனம் தொடர்பான கணிப்பும் உயர்வடையும்.
5. பங்குகளுக்கான இரண்டாம் நிலைச் சந்தையொன்று உருவாகும்.
6. வெளிநாட்டு முதலீட்டாளர்களை நாட்டினுள் ஈர்த்தெடுக்க முடிதல்.

(4 விடயங்களுக்கு 1/2 வீதம் 02 புள்ளிகள்)

/பக். 14 ஐப் பார்க்க.

(ஆ) 1. கம்பனி பெற்றுக் கொள்ளும் இலாபம்.
2. போட்டிக் கம்பனி செலுத்தும் பங்கிலாபம்.
3. முன்னைய வருடத்தின் செலுத்திய பங்கிலாபம்.
4. முன்மொழியப்பட்ட பங்கிலாபத்தை எதிர்வரும் வருடங்களிலும் செலுத்த முடியுமா என்பது
5. வைப்புக்களுக்காக வங்கி செலுத்தும் வட்டி வீதம்
6. பங்காளர்களின் விருப்பம். (4 விடயங்களுக்கு 1/2 வீதம் 02 புள்ளிகள்)

(iii) எதிர்கால மனிதவளத் தேவையினை எதிர்வுகூறும்போது கவனத்திற் கொள்ளவேண்டிய விடயங்கள் :-
- ★ பொருள் / சேவைக்கான கேள்வி
- ★ நிறுவனத்தின் நோக்கம்
- ★ உற்பத்தி முறை
- ★ எதிர்காலத்தில் ஊழியர்கள் இளைப்பாறுதல்.
- ★ பதவி விலகும் ஊழியர்களின் எண்ணிக்கை
- ★ பதவி உயர்வு பெறும் ஊழியர்களின் எண்ணிக்கை
- ★ எதிர்காலச் செயற்றிட்டம்
- ★ சேவையினை முடிவுறுத்துதல். (4 விடயங்களைக் குறிப்பிட்டு விளக்குவதற்கு புள்ளிகள் 04)

(iv) (அ) 1. பதவியின் பெயர் 2. வயதெல்லை
3. சேவை நிபந்தனைகள் 4. கல்வி, தொழிற்தகைமைகள்
5. அனுபவம் 6. சம்பள அளவு
7. விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க வேண்டிய முறை 8. முடிவுத்திகதி
(விடயங்கள் 8 இருப்பின் புள்ளிகள் 02)
(5 விடயங்களுக்கு மேல் இருப்பின் புள்ளி 01)
(5 ஐ விடக் குறைவாயின் புள்ளி இல்லை)

(ஆ) 1. குறிப்பிட்ட காலத்திற்கு முன்னர் அறிவித்தல்.
2. திகதி, நேரம், இடம் என்பவற்றை முன்னரே ஆயத்தப்படுத்திக் கொள்ளல்.
3. விண்ணப்பதாரர்களுக்குப் பொருத்தமான சூழலொன்றை (Friendly Environment) உருவாக்கிக் கொள்ளல்.
4. விண்ணப்பதாரர்களின் மனப்பாங்குகளை இனங்காண்பதற்கான முறையொன்றிருத்தல்.
5. குழு அங்கத்தவர்களுக்குக் கருமங்களைப் பகிர்ந்தளித்தல்
(4 விடயங்களுக்கு 1/2 வீதம் 02 புள்ளிகள்)

(v) சிறந்த தொழில் வழங்குனர், தொழில் கொள்வோர் தொடர்பானது, நிறுவனமொன்றின் நோக்கத்துடன் தொழில் வழங்குனர், தொழில் கொள்வோர் நோக்கமும் மோதலின்றி அடைந்து கொள்வதற்கு உதவுகின்ற முறையினை விளக்கும் விடைகளுக்குப் புள்ளிகள் வழங்கவும். (புள்ளிகள் 04)

8. (i) 1. வகைப்படுத்தல் - தரவுகளின் பண்புகளுக்கமைய பகுதிகளாக வகைப்படுத்தல்
2. தெரிவு செய்தல் - தரவுகளை சிறந்த ஒழுங்குமுறைக்கேற்ப தயாரித்தல்.
3. கணித்தல் - தரவுகளை எண்ணிக்கையின் அடிப்படையிலோ அல்லது தர்க்க ரீதியாகவோ செயற்பாடுகளுக்குட்படுத்துதல்.
4. பொழிப்பாக்குதல் - தரவுகள் மூலம் யாதேனும் கருத்தொன்றைப் பெற்றுக்கொள்ளக் கூடியவாறு சுருக்கமாக முன்வைத்தல்.

(பெயரிட்டு விளக்குவதற்கு 04 புள்ளிகள்)

(ii) 1. பஸ் வலையமைப்பு (Bus Net Work)
சகல கணினிகளும் பொதுவான நேர் அமைப்பில் நேரடியாகத் தொடர்புபடக்கூடியவாறு அமைக்கப்பட்டுள்ள வலையமைப்பாகும். ஒரு கணினி செயற்பாடாவிடின் முழு முறைமையுமே செயலிழந்துவிடும்.

[பக். 14 ஐப் பார்க்க.

2. வலைய வலையமைப்பு (Ring Net Work)

அனைத்து கணினிகளும் மற்றைய கணினிகள் இரண்டுடன் தொடர்புபடுமாறு அமைக்கப்பட்டுள்ள வலையமைப்பாகும். இவற்றிற்கு மத்திய கணினியொன்று இருக்காது.

3. உடு/ நட்சத்திர வலையமைப்பு (Star Net Work)

மத்தியில் காணப்படும் கணினியொன்றுடன் ஏனைய கணினிகள் தொடர்புபடுத்தப்பட்டு வடிவமைக்கப்பட்ட வலையமைப்பாகும். மத்தியில் காணப்படும் கணினியினூடாக ஏனைய கணினிகளுடன் தொடர்பு கொள்ள முடியும்.

4. மர வலையமைப்பு (Tree Net Work)

மரமொன்றின் கிளைகள் பிரிந்து செல்லும் முறைமைக்கமைய மத்திய கணினியுடன் ஏனைய கணினிகள் தொடர்புபடுத்தப்பட்டு அமைக்கப்பட்டுள்ள வலையமைப்பொன்றாகும். மத்திய கணினியோ அல்லது துணைக் கணினியோ செயலிழக்கும்போது அதனைத் தொடர்ந்து காணப்படும் கணினிகளுக்குத் தகவல்களைப் பிரிமாற்றம் செய்ய முடியாது.

(புள்ளிகள் 04)

(iii)

1.	உபாய மட்டம்	-	உயர்மட்ட முகாமையாளர்கள்
2.	முகாமைத்துவ மட்டம்	-	மத்தியமட்ட முகாமையாளர்கள்
3.	அறிவு மட்டம்	-	அறிவு தரவுப்பணியாளர்கள்
4.	செயற்பாட்டு மட்டம்	-	செயற்பாட்டு முகாமையாளர்கள்

(புள்ளிகள் 04)

(iv) (அ)

1. வங்கிக் கடனைப் பெற்றுக்கொள்வதற்கு
2. ஊழியர்களை ஈர்த்துக்கொள்வதற்கு
3. கூடுதலான வழங்குனர்களை ஈர்ப்பதற்கு
4. முதலீட்டாளர்களை ஊக்குவிப்பதற்கு

(விடயங்கள் 4ற்கு 02 புள்ளிகள்)

(ஆ)

1. வணிகத்தின் தன்மை
2. வணிகத்தின் கட்டமைப்பு
3. வணிகத்தின் நோக்கம்
4. வணிகத்தின் வரலாறு
5. வணிகத்தின் ஆரம்பம்
6. வணிகத்தின் வெற்றிக்கான காரணங்கள்

(விடயங்கள் 4ற்கு 02 புள்ளிகள்)

(v) (அ)

1. உற்பத்தி உபாய வழிமுறைகள்
2. விலையிடல் உபாய வழிமுறைகள்
3. வினியோக உபாய வழிமுறைகள்
4. மேம்படுத்தல் உபாய வழிமுறைகள்

(விடயங்கள் 4ற்கு 02 புள்ளிகள்)

(ஆ)

1. மதிப்பிடப்பட்ட செயற்றிட்டக்கிரயம்
2. மதிப்பிடப்பட்ட வருமானக்கூற்று
3. மதிப்பிடப்பட்ட காசுப்பாய்ச்சற்கூற்று
4. மதிப்பிடப்பட்ட நிலைமைக்கூற்று (ஐந்தொகை)
5. கடன் மீளச் செலுத்தலுக்கான அட்டவணை

(விடயங்கள் 4ற்கு 02 புள்ளிகள்)